★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

கல்லூரி மாணவர் உ...

'காந்தி நினைவு புத்தகாலயம்' ஒன்று ... திரட்டியபின்பும், கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய... ஈவில் இத்துவக் கல்லூரி நிர்வாகத்தின் குற்ற... வர் ஒருவர் கல்லூரி முன்பாக உண்ணாவிரதம் இருந்து வருவதாகத் தெரியவருகிறது.

கல்லூரி அதிகாரிகள், இன்னும் போதுமான பணம் சேர வில்லை என்றும், எனவேதான் கட்டிட வேலை துவக்கவில்லை என்றும் கூறுகின்றனராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: தை 5உ புதன் (18—1—56) ★ ★ வெளியீடு: தை 6உ வியாழன் (19—1—56) [இதழ் ...

'தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கே'

பீகார் மந்திரிசபை பதவி விலகல்?

இரு மாவட்டப் பகுதிகளை மேல் வங்கத்திற்குத் தருவதற்கு எதிர்ப்பு

ராஞ்சியில் கடையடைப்பு

பாட்னு, ஜன. 17—

பீகாரில் உள்ள இரு மாவட்டங்களில் பெரும் பகுதியை மேற்கு வங்கத்திற்கு மாற்றுவதென மாநிலக் குழு சிபாரிசுப்படி இந்திய சர்க்கார் செய்த முடிவை எதிர்த்து, பீகார் மாநில மந்திரிசபை இராஜினமா செய்யும் என்று சட்டசபை காங்கிரஸ் கட்சி பிரதம கொரடா அறிவித்திருக்கிருர்.

'ஏற்கனவே முடிவாகிவிட்டது' என்ற செய்தி குறித்து, அவர் கருத்தறிவிக்க மறுத்துவிட்டிருக்கிருர்.

மான்பூம், பூர்ணியா என்ற இரு மாவட்டங்களின் பகுதிகளை பீகாரிலிருந்து பிரித்து மேற்கு வங்கத்துடன் இணைப்பதை பீகார் காங்கிரசார் எதிர்க்கின்றனர். வேறு பல கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

'மந்திரிசபையினர் நேற்று கூடி மூன்று மணி நேரம் வரை நிலைமைகளைக் குறித்து விவாதித்தனர் என்பது மட்டும் உண்மை' என்று, நிதி மந்திரி தெரிவித்தார்; வேறு எதுவும் கூற அவர் மறுத்தார்.

இந்திய சர்க்காரின் முடிவுக்கு எதிராக பீகாரில் உள்ள ராஞ்சி, லோகார்தகா, குமியா, சிம்தேகா நகரங்களில் பெரும் ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன.

சர்க்கார் செயல் வருந்தத்தக்குரியது தான்; ஆனல், இப்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேண்டாம்' என்று கூறியிருக்கிருர்.

'நாம் கேட்டது சிறிதுதான்; ஆனல், அதிலும் சிறிய அளவுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

★

மேற்கு வங்கத்தில்...

கல்கத்தா, ஜன. 17—

மேற்குவங்க மாநிலத்தவர், பீகாரில் உள்ள மான்பூம், பூர்ணியா ஆகிய இரு மாவட்டங்களும் மேற்கு வங்கத்திற்கும் வேண்டுமெனக் கோரினர்; மாநிலக் குழுவும் அவ்வாறே சிபாரிசு செய்திருந்தது; ஆனல், இந்தியப் பேரரசு இரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு பகுதியை பீகாரிலேயே தொடர்ந்து நீடிக்கச் செய்துவிட்டு, இதர பகுதிகளை மட்டும் மேற்கு வங்கத்திற்குத் தந்திருக்கின்றனர். மேற்கு வங்கத்தின் கோரிக்கை மிகக் குறைந்தபட்சமான ஒன்று என்றும், ஆனல் அதனை ஏற்க இந்தியப் பேரரசு மறுத்துவிட்டது பெரும் குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதாகவும் இங்குள்ள காங்கிரசார் கருதுகின்றனர்.

முதன் மந்திரி ராய் இது குறித்துக் கருத்தறிவிக்கையில், 'இந்திய

சட்டசபை உறுப்பினர் எதிர்ப்பு!

கட்டாக், ஜன. 17—

பீகார், மத்திய பிரதேச மாநிலங்களிலிருந்து சில பகுதிகளை ஒரிசா மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்று ஒரிசா கோரியிருந்ததை ஏற்க இந்திய சர்க்கார் மறுத்துவிட்டதை எதிர்த்து, 20 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், சில மந்திரிகள், மக்கள் சபை உறுப்பினர்கள் உட்பட தங்கள் இராஜினமா கடிதங்களை உத்கல் பிரதேச காங்கிரஸ் தலைவருக்கு அனுப்பியுள்ளனர் என்று தெரியவருகிறது.

உத்கல் பிரதேச காங்கிரசார், நிலை குறித்து இன்னும் இரண்டொரு தினங்களில்கூடி முடிவெடுப்பர் என்று தெரியவருகிறது.

'மராட்டியர்களே, திரண்டெழுவீர்'

'அநீதியை முறியடிப்போம்— நீதியை நிலைநிறுத்துவோம்'

பூனு பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜெயகர் பரணி

சென்னை, ஜன. 18—

"பானிபட் யுத்தத்தில் மராட்டியர் கண்ட தோல்விக்குப் பிறகு, இப்போது பம்பாய் நகரை மராட்டியம் இழந்துவிடுவதுதான், மிகப் பெரிய தோல்வியாகும்—மராட்டியருக்கு!

"இந்த முறை ஏற்படுகிற தோல்வி, இந்தியப் பேரரசினுல்—தேசிய சர்க்காரினுல் மராட்டியருக்கு ஏற்படும் மிகப் பெரும் தோல்வியாகும்.

"பம்பாய் நகரை இன்றுள்ள நிலைக்குக் கட்டி வளர்த்தவர்கள் மராட்டியர்களேயாவர்; எனவே, நிச்சயம் மராட்டியர் போராடி, பம்பாயை மராட்டியத்துடன் இணைத்தே தீருவர்.

"மராட்டியர்கள் எங்கே இருந்தாலும், இந்தியாவின் எந்தப் பகுதியில் வாழ்பவர்களாலும், சம்யுக்த மராட்டியம் காணத் தொடர்ந்து இடைவிடாது போராட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

'காமராசர் பதவியைத் துறக்க வேண்டும்'

நேரு முடிவை எதிர்த்து மதுரையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்-கடையடைப்பு

சென்னை, ஜன. 18—

தேவிகுளம், பீர்மேடு முதலிய நான்கு திரு—கொச்சி தமிழ் வட்டங்கள், தமிழகத்துடன் இணைக்கப்படாதது மட்டுமின்றி, செங்கோட்டை வட்டத்திலும் ஒரு பகுதியை கேரளத்திற்குத் தருவதென பண்டித நேரு செய்த அநியாய முடிவை எதிர்த்து தமிழகமெங்கணும் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் முக்கியமான நகரங்கள் சிலவற்றில் பெரும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

விழிப்புப் பெற்று, விபரம் தெரிந்த மக்கள் எல்லாம், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் விபரீத எதேச்சாதிகாரப் போக்கை பகிரங்கமாகவே எதிர்த்துக் குரல் தந்திருக்கின்றனர்.

'ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் காமராசர் மந்திரிசபை உடனடியாகப் பதவியிலிருந்து விலக வேண்டும்; இந்தியப் பேரரசு இழைத்துள்ள அநீதிக்குப் பரிகாரம் தேடவேண்டும்,' என்ற முழக்கம் பெரும் அளவில் எதிரொலித்திருக்கிறது.

காமராசர், 'நான் கருத்தறிவிக்கத் தயாராக இல்லை' என்று கூறினுராம்.

பனம்பள்ளி கோவிந்த மேனன்—மலையாள நாட்டு முதன் மந்திரி, தென் திருவாங்கூர் தமிழ் வட்டங்கள் கேரளத்திற்குக் கிடைக்கவில்லை என்பதால் மிகவும் வருந்துவதாகத் தெரிவித்தாராம்—பரிதவித்தாராம்!

'அந்த மாநில முதன் மந்திரி மேனன் பெற்றிருக்கும் சுறுசுறுப்புக்கூட சென்னை முதல்வர் காமராசருக்கு இல்லையே,' என, தமிழகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலரும் வருந்தினர் என்று தெரியவருகிறது.

தோழர் ம. பொ. சிவஞானம் (கிராமணியார்) 'நான் இந்திய சர்க்காரின் முடிவை ஏற்பதற்கு இல்லை' என்றும், முடிவை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போவதாகவும் தெரிவித்திருக்கிருர்.

(4-ம் பக்கம் பார்க்க)

மந்திரி பதவியினின்று விலக ஹீரே முடிவு

பம்பாய் நகரைத் தனியாகப் பிரித்து, மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் கொண்டு வருவதற்கு மத்திய ஆட்சியினர் செய்துள்ள முடிவு, தனக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ள காரணத்தால், பம்பாய் நிலவரி அமைச்சர் பி. எஸ். ஹீரே, தமது பதவியை இராஜிநாமாச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. விரைவிலேயே இதுபற்றி அவர் அறிவிக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

மராட்டியம் பாடும் போர்ப் பரணி!

தியாக வரலாறு தயாராகிறது

பெரிய மனிதர்கள் வேண்டுகோள் காலடியில்

துப்பாக்கிக் குண்டுகளுக்கு நால்வர் இரை

மராட்டிய மண்டலம் எரிமலையாகக் குமுறுகிறது; அலைகடல்போல் கொந்தளிக்கிறது.

மராட்டிய வீரர்கள் முரசறைந்து, கொடி உயர்த்தி, பறைசாற்றிப் போர்ப் பரணி பாடுகின்றனர்.

அவர்களது வீரமுழக்கத்தின் பேரொலி, 'பெரிய மனிதர்'களின் நயவஞ்சகம் தோய்ந்த வேண்டுகோள்—கண்டிப்புக் குரல் இவற்றை அமிழ்த்துவிட்டு, இந்தியத் துணைக்கண்டம் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

'பெயரும், புகழும்பெற்ற பிரதமர்' என்ற முறையில் பண்டித் நேரு, கரகரத்த குரலில் நீலிக்கண்ணீர் வடித்து, தொடர்பில்லாத விஷயங்களைச் சுட்டிக்காட்டி ...டுத்த வேண்டுகோளை மராட்டியர் திரும்பிக்கூடப் பார்க்க...ல்லை.

'சம்யுக்த மராட்டியம்' என்ற தங்கள் இலட்சியத்திற்காக, மராட்டியர்—சகல கட்சி பெரும் அரசியல் தலைவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், மாணவர் பட்டாளம், தொழிலாளர் பெருமக்கள், விவசாயிகள், பாட்டாளிகள்—அனைவரும் அணி அணியாகப் போர்க்களம் தேடித் திரண்டு நிற்கின்றனர்.

'முதலாளிகளின் காதலு'க்கு நியாயத்தைப் பலியிட்டுவிட்ட பண்டிதரின் அறிவிப்புக் கிடைத்த இரண்டு நாட்களுக்குள்ளாக மராட்டியர், தங்கள் பேராற்றலை வெளிக்காட்டி வருகின்றனர்.

நான்கு பிணங்களை இரு நாட்களில் மராட்டியர் தந்தாயிற்று; எண்ணற்றோர், போலீசாரின் தடிகளால் பிளக்கப்பட்ட தங்கள் தலைகளிலிருந்து செங்குருதியை மராட்டிய மண்ணில் குழைத்துவிட்டனர்.

தியாக சரிதம் தீட்ட எழுதுகோல் கொண்டுவிட்டனர் மராட்டியர்!

பம்பாயில் மட்டும் எட்டு முறைகள், எண்ணற்ற இடங்களில் போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு மராட்டியர் இலக்காகியிருக்கின்றனர்.

பெல்காம் நகரில் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் உடைபட்டுச் சிதறிவிட்டிருக்கிறது.

ஆதிக்கபுரியினரின் துப்பாக்கிகள் தங்கள் அகன்ற வாயால் நான்கு மராட்டியரை விழுங்கி வென்று நின்றுவிட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18—1—'56 புதன்

நேரு லீலா!

இராம லீலா, கிருஷ்ண லீலா ஆகியவற்றை நாம் புத்தகங்களில் படித்துமிருக்கிறேம்; படக் காட்சிகளில் கண்டுமிருக்கிறேம்; இப்பொழுதும், அவைகளை, சத் கதா காலட்சேபங்களாகக் கேட்டும் வருகிறேம்.

அவை இரண்டும் ஆண்டவனின் அவதாரப் பெருமையாகப் போய்விட்டன. அந்த லீலைகளில் மலிந்துள்ள சம்பவங்கள் அறிவுக்கும், அறநெறிக்கும், மனிதத் தன்மைக்கும் ஒத்திருக்கின்றனவா என்று பார்க்க வேண்டியதே நமக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. அவை ஆண்டவனின் திருவிளையாடல்கள் என்று, ஆரம்பத்திலேயே அட்டவணை போட்டுவிட்டக் காரணத்தால், நாமும் அவைகளில் நிரம்பிக் கிடக்கும் ஆபாசங்களை-மிருகச் செயல்களை ஆராய்ந்து பார்ப்பதே அபசாரம் என இருந்து விட்டோம்.

ஆனால் இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் லீலா விநோதம், அத்தகைய நிலைமையில் இருப்பதல்ல. அது இந்தியத் துணைக் கண்டத்தின் எதிர்காலத்தை அழிக்கக்கூடியது அல்லது ஆக்கக்கூடியதுஆகும். அவரும் ஆண்டவனின் அவதாரம் அல்ல; இது, அதற்கு ஏற்றக் காலமும் அல்ல. எனவே, இந்தியப் பிரதமராக இருந்து அவர் ஆற்றிவரும் லீலா விநோதங்களை நாம் ஆராய்ந்து பார்க்காமல் இருப்பதற்கில்லை.

கடந்த ஏழு ஆண்டுகளாகப் பண்டித நேரு இந்தியப் பிரதமராக இருந்து ஆற்றியுள்ள பணியினை நோக்கும் எவரும், இங்கு மக்களாட்சிப் பண்பு வேர்விட்டிருக்கிறது என நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அந்தத் தனி மனிதரின் பெயர் பரவுகிறது; அவர் புகழ் ஓங்கி வளர்ந்துவருகிறது; அவருடைய செயல் விரிவடைந்துகொண்டு போகிறது—இந்த உண்மையைத்தான் ஒவ்வொருவரும் கண்டுவருகிறர்கள்.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு தவறே செய்யமாட்டார் என்று நினைக்கும்படியாகவே இங்கு மக்கள் பயிற்சியளிக்கப் பட்டு வருகின்றனர் இந்தத் திருப்பணியைத் தேசிய ஏடுகள் எனப்படுபவைகள் மிக மிகத் திறமையாகச் செய்தும் வருகின்றன. சிறிய பெரிய தலைவர்கள் எனப்படுபவர்களும் இதையே நித்திய நாதமாக்கியும் வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு, தவறு செய்யமாட்டாரா செய்வாரா என்பதைக் கண்டறிய காஷ்மீரும் கோவா பிரச்சினைகளுமே போதுமானவையாகும்.

கோவாவை விடுவிக்க இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து அறப்போர்ப் படையை உருவாக்கி ஊக்குவித்து, ஆசிமொழிந்து, வழிகூட்டி அனுப்பினர் பண்டிதர், ஆரம்பத்தில். அதே பண்டிதர், பின்னர், 'அது கூடாது-ஆகாது' என அறப் போராட்டத்தைக் கண்டித்துக் கூறினர்.

இதிலுள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி, ஏன் என்று பண்டிதரைக் கேட்கத் தேசிய ஏடுகளுக்குத் துணிவில்லை. போராட்டத்தை ஆதரித்து ஆசி கூறியபொழுதும், அதைப் பிறகு கண்டித்தபொழுதும், இரண்டு நிலையிலும் பண்டித நேருவை தேசிய ஏடுகள் பாராட்டிப் புகழ்ந்து பேசின!

ஒரு தனி மனிதரை இந்த அளவிற்கு வளரவிடுவது, அவர் செயலில் எவ்வளவு முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரிந்தபோதிலும் அதனை எடுத்துக் காட்டித் திருத்த முயற்சிக்காது, அவரைத் தட்டிக்கொடுத்து வருவது, மக்களாட்சியை வளரவைக்காது. அதற்கு மாருக ஜனநாயகப் பண்பை வெட்டிச் சாய்க்கவே உதவும்.

மாகாண சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்மீது இந்தியப் பேரரசின் பெயரால் இந்தியப் பிரதமர் தந்துள்ள தீர்ப்பு, அந்தத் தனி மனிதரின் எதேச்சாதிகாரத்தின் எதிரொலியாகவே இருக்கிறது.

தேவிகுளம் - பீர்மேடு சென்னைக்கே கிடைக்க வேண்டியது நியாயமாக இருக்க, அவ்விரு பகுதிகளையும் கேரளத்திற்கே உரிமையாக்கி இருக்கிருர் இந்தியப் பிரதமர்.

இவ்விரு இடங்களிலும் தமிழர்களே பெரும் எண்ணிக்கையினராக உள்ளனர்; புள்ளி விவரம் இவ்வுண்மையைத்தான் கூறுகிறது.

அங்குள்ள தமிழ் மக்கள் சென்னையுடன் இணைந்து வாழ்வதைத்தான் பெரிதும் விரும்புகின்றனர். ஏற்கனவே தங்கள் விருப்பத்தை தி. கொ. த. நா. காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்ததின் மூலம், ஒளிவு மறைவு இல்லாமல் வெளிக்காட்டியும் உள்ளனர்.

மக்களின் கருத்தறிந்தும், அக்கருத்தின்படி செயல்படுவதும்தான் மக்களாட்சி முறையாகும். மற்ற நடைமுறை வெறும் ஆணவப் போக்கேயாகும் — தான்தோன்றித்தனமேயாகும் — வடிகட்டின எதேச்சாதிகாரமேயாகும்.

மராட்டிய மக்களின் கடும் உழைப்பினுலேயே பம்பாய் இந்தியாவின் தொழில் நிலையமாக இன்று இருந்துவருகிறது. அந்நகரைத் தங்கள் மாகாணத்தின் தலைநகராகக் கொள்ள மராட்டியர்களுக்குப் பரிபூரண உரிமை இருக்கிறது:

பம்பாய் நகரசபை, மராட்டியர் கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் தீர்மானமும் நிறைவேற்றி இருக்கிறது. மராட்டிய மாகாணத்தின் தலைநகராகப் பம்பாய் நகரை ஆர்குவதே மக்களாட்சி முறைக்கு உகந்ததாகும்.

மராட்டிய மாகாணத்துடன் நியாயமாகச் சேர்க்கப்பட வேண்டிய பம்பாய் நகர், இன்று மத்திய ஆட்சியின்கீழ் கொண்டுவரப்படுகிறது. இப்போக்கில் நேருவின் தீர்ப்பு இருக்கிறது.

'பம்பாய் நகரம், நிலநூல் ரீதியாக மகாராஷ்டிரத்தால் சுற்றி வளைக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அதன் ஒரு பகுதியாகவும் கருதலாம். இந்நகரிலு கூட, ஒரே மொழி பேசும பெருங்கூட்டத்தினராக உள்ளவர்களும் மராட்டியர்களே யாவர். பம்பாயின் தலையெழுத்து எதுவாக இருந்தபோதிலும், மராட்டியர்கள் பெரும் பொறுப்பேற்றே தீருவர்.'

இவ்வாறு பம்பாய் நகருக்கும், மராட்டிய மக்களுக்கும் உள்ள நெருங்கியத்தொடர்பை மறைக்க முடியாது ஒப்புக்கொண்டு பேசியுள்ள நேரு தான், பம்பாய் நகரை மராட்டியர்களுக்கு ஆக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

பம்பாய் நகரில் ஏறத்தாழ இருபத்தெட்டு இலட்சம் மராட்டியர்கள் உள்ளனர். பம்பாய் நகர், இந்தியப் பேரரசின் நேரடி ஆட்சிக்கு உள்ளாக்கப்படுவதால், அங்கு மக்களாட்சி முறை மாய்க்கப்படப் போகிறது. இருபத்தெட்டு இலட்சம் மராட்டிய மக்களும், மற்றமக்களுடன், தங்கள் வாக்குரிமையையும், அவ்வழி இயங்கும் அரசியல் உரிமைகளையும் கூடிய விரைவில் இழந்துவிடப் போகின்றனர். இந்தியப் பிரதமர் நேரு, மக்களாட்சி முறைக்குச் செய்ய இருக்கும் மகத்தான தொண்டு இதுவே ஆகும்!

அந்தத் தனி மனிதரின் லீலா விநோதம், இங்குள்ளாரை இன்னும் என்னென்ன பாடு படுத்த இருக்கிறதோ யார் கண்டார்கள்.

இந்தியப் பிரதமர் நேருவின் லீலா விநோதம் பற்றி, மனம் நொந்து வினேபா பாவேயும், மனம் வெந்து அன்பர் ஆச்சாரியாரும் ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்கள் வாயுரையை மெய்ப்பித்துக் காட்டுவதுபோல் இருக்கிறது, மாகாண சீரமைப்புப் பற்றி இந்தியப் பிரதமர் நேரு தந்துள்ள எதேச்சாதிகாரத் தீர்ப்பு.

ஆக்க வேலைக்கு அணுசக்தி

ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதில் ரஷ்யா, அமெரிக்காவை மிஞ்சிவிடும் என்று கருதப்படுகிறதாம்.

இது சம்மந்தமான விவரங்கள் அனைத்தும் அண்மையில் வெளியிடப்பட்ட சோவியத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியுள்ளன

பனியை உடைத்துக்கொண்டு செல்லக்கூடிய அணுசக்திக் கப்பல் அவற்றுள் குறிப்பிடத்தக்கது.

அணுசக்தியிலிருந்து மின்சார உற்பத்திக்கும் ஒரு பெரிய திட்டம் நிறைவேற்றப்படும்.

இதுவரையில்லாத அளவுக்கு இரும்பு, எஃகு உற்பத்திக்குப் புதிய திட்டத்தில் இலட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரஷ்ய மக்களுக்கு 30 சதவிகித ஊதிய உயர்வு, குடியிருப்பு வசதி இரட்டிப்பு, தீவிரப் படிப்பு, போக்குவரத்துக்கும் அணுசக்தி, பெரிய அளவில் கலர் டெலிவிஷன் ஆகியனவும் திட்டத்தில் அடங்கியுள்ள இதர அம்சங்களாம்

1960-க்குள் தொழில் நுணுக்க நிபுணர்களை 50-சதவிகிதம் பெருக்கவும் உ[illegible]தேசிக்கப்பட்டுள்ளது.

இந்[illegible]அம்சம் மேற்கத்தியாருக்கு விடப்பட்டுள்ள ஒரு சவாலெனவும் கருதப்படுகிறதாம்.

ரயில்வேஅபிவிருத்தித் திட்டத்திலும் தென்னுட்டிற்குப் பட்டை நாமம்!

தென் பகுதி இரயில்வே அபிவிருத்தி மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனிக்கப்படுமாம்

புதுடில்லி, ஜன. 16—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வே அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை இப்போது குறைக்கப்படுவதினுல், 'தட்சிணப் பிரதேச' இரயில்வேயும், அதனை உபயோகிக்கும் தென்னுட்டு மாநிலங்களும் அபிவிருத்தித் திட்டங்களை இழந்து கடுமையாகப் பாதிக்கப்படவிருக்கின்றன என்று தெரிய வருகிறது.

இரயில்வே இலாகாவினர் தயாரித்த அபிவிருத்தித் திட்டம் ரூ. 1480 கோடி மதிப்புடையது. இதில் ரூ. 385 கோடி வரை திட்டக் குழு வெட்டிவிட்டது; ரூ 1125 கோடி தான் அனுமதிக்கப்பட்டது. புதிய பாதை அமைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையே கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறதாம் இந்தத் தலைப்பில் உத்தேசிக்கப்பட்டிருந்த ரூ. 200-கோடி செலவு ரூ 65 கோடியாகக் குறைந்து விட்டதாம்.

இதனுல் தென் மாநிலங்களில் உத்தேசிக்கப்பட்டிருந்த புதிய பாதை அமைப்புகள் கைவிடப் படுகின்றன. அவை எல்லாம் மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுமாம் உத்தேசிக்கப்பட்டிருக்கும் 150-மைல் நீள புதிய இரயில் பாதைகள் முக்கியமாக உருக்கு - நிலக்கரித் தொழிற்சாலைகளுக்கு அருகில் அமைக்கப்படும் என்றும், இவை அநேகமாக மேற்குப் பிராந்தியத்திலேயே அடங்கி விடுகின்றன என்றும் கூறப்படுகிறது

பின்தங்கிய நாடுகளுக்குப்

பொருளாதார உதவி!

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அனுமதி கோருகிருர்

வாஷிங்டன், ஜன. 16—

"பின்தங்கிய நாடுகளில் நிலவும் வறுமையும், மனக்கசப்பும் அந்த நாட்டு மக்களை சர்வதேசக் கம்யூனிசத்திற்கு இலக்காக்கிவிடுகின்றன; எனவே, கம்யூனிச ஆபத்திலிருந்து தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அந்த நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியும், உறுதியும் ஏற்பட வேண்டும்; இதற்கு அந்த நாடுகளுக்கு உதவுவது அவசியம்.

"கம்யூனிஸ்டல்லாத நாடுகளை எதிர்நோக்கியுள்ள ஆபத்தைச் சமாளிப்பதற்கு இராணுவ உதவி மட்டிலும் போதுமானதல்ல என்று எச்சரிக்கைவிடுகிறேன்" என்று, அமெரிக்க மக்கள் மன்றமான காங்கிரசிற்குக் குடியரசுத் தலைவர் ஐசனேவர் அனுப்பியுள்ள வரவு - செலவுத் திட்டச் செய்தியில் கூறியிருக்கிருராம்

"1957-ம் ஆண்டு ஜூன் திங்கள் முடிவு இப்போதுள்ள பொருளாதார உதவித் திட்டத்தின்கீழ் 120 கோடி டாலரும், புதுத் திட்டங்களின்கீழ் 59 கோடி டாலரும் செலவிடப்படும்," என்று ஐசனேவர், செய்தியில் மேலும் தெரிவித்திருக்கிருராம்.

தேசிய, சர்வ தேசியப் பாதுகாப்பிற்காகப் படைகள் வைத்துக் கொள்ள நிதி வசதி இல்லாத நாடுகளுக்கு இராணுவ உதவி, பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பொருளாதார உதவி, நான்கு அம்சத் தொழில் நுணுக்க உதவி இவற்றிற்காக இந்தப் பணம் செலவிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருராம்.

வருகிற ஆண்டுகளில் சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து நீண்ட காலப் பொருளாதார உதவித் திட்டம் வகுக்கவும் குடியரசுத் தலைவர் அதிகாரம் கோரியிருக்கிருராம்.

அரபு அகதிகளுக்கும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடிபெயரும் அகதிகளுக்கும் கஷ்ட நிவாரணமளிப்பது பற்றிய உதவித் திட்டத்தைத் தொடர்ந்து நீடிக்கவும் அவர் சிபாரிசு செய்திருக்கிருராம்.

மனிதன் உருவாக்கிய செயற்கைக் கோளம்

பூமிக்கு 300 மைல் உயரம் பறக்குமாம்

வாஷிங்டன், ஜன. 15—

மனிதனுல் உருவாக்கப்பட்ட முதலாவது கிரகம் பூமிக்குச் சுமார் 300 மைல் உயரத்தில், 3-முறை வெடிக்கும் ராக்கெட்டுகள் மூலம் பூமியைச் சுற்றிவரப் பறக்கவிடப்படும் என அமெரிக்கப் பாதுகாப்பு இலாகா அறிவித்துள்ளது.

அந்தச் செயற்கைக் கோளம் 300 மைல் உயரம் அடைந்தவுடன் ஒரு மண்டலமாகத் தங்கி பூமியிலிருந்து 200 மைல்களுக்கும் 800 மைல்களுக்கும் இடையே முட்டை வடிவமான பாதையில் சுற்றிவரும். மண்டலமாக இரு வார காலம் அல்லது ஒரு மாதம் கோளம் தங்கலாம் என மதிப்பிடப்படுகிறது. பின்னர் அது கீழே விழுந்து எரிநட்சத்திரம் போன்று எரிந்து போகும்

முதலாவது ராக்கெட் 30-ல் இருந்து 40 மைல் உயரம் சென்றதும், எரிந்து கீழே விழுந்துவிடும். அதன் வேகம் மணிக்கு சுமார் 3,000-த்திலிருந்து 5,000 மைல் இருக்கும்.

இரண்டாவது ராக்கெட் கோளத்தின் வேகத்தை மணிக்கு சுமார் 11 ஆயிரம் மைலாக அதிகரித்துவிட்டு, ஒரு மணி நேரம் கழிந்ததும் பூமியிலிருந்து 130வது மைல் உயரத்தில் எரிந்து கீழே விழுந்துவிடும்.

பிறகு மூன்ருவது பாகம் வெடித்து, உலோகப் பந்தினை 300 மைல் உயரத்திற்குக்கொண்டு போகுமாம்.

இந்தோ-சீனப் போர் நிறுத்தம்!

மீண்டும் 9 நாடுகள் மாநாடு

புதுடில்லி, ஜன 16—

சூழ்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாறுதங்களினுல், இந்தோ-சீனு பற்றிய ஜினீவா ஒப்பந்தத்தை சரிவர அமுல் செய்ய முடியவில்லை என்பதால், ஒப்பந்தத்தை மேற்கொண்ட ஒன்பது நாடுகளும் சேர்ந்து மீண்டும் மாநாடு ஒன்றில் கூடி இது குறித்து விவாதிக்க வேண்டிய நிலை பிறந்திருக்கிறது.

இன்னும் இரண்டு திங்களுக்குள்ளாக அப்படி ஒரு மாநாடு நடைபெறலாம் என்றும், அதற்குள் சர்வதேசப் போர் நிறுத்த மேற்பார்வைக் குழுவின் மூன்ருவது அறிக்கையும் ஒன்பது நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுவிடும் என்றும் இங்கு கூறப்படுகிறது.

இந்தோ-சீன விவகாரம் சீக்கிரம் முடிவடைய வேண்டுமென்பதில் இந்தியப் பேரரசிற்கு தனிப் பொறுப்பு உண்டு; ஏனெனில், மேற்பார்வைக் குழுவின் தலைவராக அது இருந்துவருகிறது. விவகாரம் சீக்கிரம் முடிவுற்ருல்; இந்தோ-சீனுவிற்குத்தான் அனுப்பியுள்ள அதிகாரிகள், இதர அலுவலர்கள் இவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்,

'கல்வித் துறைக்கு அதிகமான பணம் வேண்டும்'

'ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவானது'

இரண்டாம் திட்ட ஏற்பாடு குறித்து ஆசாத் புலம்பல்

புதுடில்லி, ஜன. 14—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வித்துறை அபிவிருத்திக்காக ரூ. 320 கோடி ஒதுக்கியிருப்பது சிறிதளவு கூடப் போதுமானதல்ல. குறைந்த அளவு ரூ 500 கோடியாவது ஒதுக்கப்பட்டால்தான் ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்ய முடியும்"

என்று, இங்கு நடைபெற்ற மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"மத்தியக் கல்வி இலாகாவினர் கல்வி அபிவிருத்திக்காக ரூ 526 கோடி செலவில் ஒரு திட்டம் தயாரித்திருந்தனர். அந்தத் தொகையே குறைந்த அளவுத் தொகையாக இருந்த போதிலுங்கூடத் திட்டக் குழுவினர் அதனை ஏற்க மறுத்தது மிக்க வருந்தற்குரியதாகும். ரூ. 5,000 கோடி செலவழிக்கப்படுகின்ற ஒரு திட்டத்தில் கல்வி அபிவிருத்திக்கென ரூ 500 கோடி சேருவது எந்த வகையிலும் அதிகமான ஒரு தொகையல்ல. கல்வி மந்திரி சபையினர் முதன் முதலில் கல்வி அபிவிருத்திக்காக ரூ. 1 000 கோடி செலவில் திட்டம் தயாரித்திருந்தனர்; ஆனல் திட்டக் குழுவினரின் ஆலோசனைப்படியே அது ரூ 526 கோடிக்குக் குறைக்கப்பட்டது அப்படி குறைக்கப்பட்ட பின்னரும் கூட மீண்டும் அத்தொகையை திட்டக் குழுவினர் ரூ. 320 கோடியாகக் குறைத்தது வருந்தற்குரிய ஒன்றுதான்."

இவ்வாறு, அந்தக் கூட்டத்தில், மத்தியக் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திட்டக் குழுவினர் இத்தொகையினை இந்த அளவிற்குக் குறைத்துவிட்டனர் என்றாலும், தாமும் தமது முயற்சியை ஒன்றும் கைவிட்டுவிடப் போவதில்லை என்றும், மந்திரி சபைக் கூட்டத்தில் தாம் இப்பிரச்சினையை மீண்டும் கிளப்பப் போவதாகவும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், கல்வி அபிவிருத்திக்குக் குறைந்த அளவுக்காகவாவது ஒதுக்கவேண்டிய தொகைகள் பற்றிக் குறிப்பிடும்போது, மாநிலக் கல்வித் திட்டங்களுக்கு ரூ 328 கோடியும், ஆசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவதற்கு ரூ. 60 கோடியும், மத்திய சர்க்கார் தம் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 128 கோடியும் ஒதுக்கவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்.

"கல்வி வளர்ச்சியில்லாதபோது தொழில் வளர்ச்சியோ, அன்றி விவசாய வளர்ச்சியோ ஏற்படுவதற்குச் சாத்தியமில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு ரூ. 900 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், திட்டங்களை நிறைவேற்ற 800 எஞ்சினீயர்களும், 5,000 ஓவர்சியர்களும் தேவையென மதிப்பிட்டுள்ளனர்; கல்வித் துறையில் அபிவிருத்தி ஏற்படாத நிலை இருக்கும்போது தேவையெனக் கருதப்படும் 800 எஞ்சினீயர்களையும் 5,000 ஓவர்சியர்களையும், தொழில் நிபுணர்களையும் உற்பத்தி செய்ய முடியுமா?" என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏற்றுக் கொண்டனர்!

'இடைநிலைக் கல்விக் கட்டத்தில் மூன்று மொழிகளில் கட்டாயப் பாடபோதனை நடைபெறவேண்டும்'

என்று, இடைநிலைக் கல்வி பற்றிய அகில இந்தியக் குழு செய்துள்ள சிபாரிசுகள், புதுடில்லியில் நடைபெற்ற மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

'ஆங்கிலத்தை மாற்றும்போது

திராவிடருக்குப் பிரதிகூலம் கூடாது'

மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எச்சரிக்கை!

"இந்தியாவின் ஆட்சி மொழியான ஆங்கிலத்தை மாற்றி அமைக்கும் எந்த ஒரு திட்டமும் பெரும் பகுதி திராவிடர்களைக் கொண்ட தென்னாட்டிற்குப் பிரதிகூலம் செய்வதாக இருக்கக்கூடாது"

"........இந்தி மொழி மூலம் பொதுப்பணித் தேர்வுகள் நடத்துவது, வடநாட்டவருக்குத்தான் சாதகமான—திட்டவட்டமான பலன்களைத் தரக்கூடியதாயிருக்கும்.

"அகில இந்தியப் பரீட்சைகள் எல்லாம், பதினான்கு தேசிய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் நடத்தப்பட வேண்டும்.

"பல்கலைக் கழகங்களின் போதனு மொழியாக வட்டார மொழிகளே இடம்பெற வேண்டும் — படிப்படியாக, பல்வேறு கட்டங்களில்,"

என்று, மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தரான வி. எல். டிசௌசா, இந்தித் திணிப்புக் குழுவினரிடத்தில் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உள்ளூர் தபால் வசதி

துணை அமைச்சர் தகவல்

திருச்சி, ஜன. 16—

உள்ளூரில் உபயோகித்துக் கொள்வதற்காக உள்ள அரை அணு தபால் 'கார்டு'கள் வழங்குவதை நிறுத்திவிட சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாயும், அந்த முறை, அஞ்சல் இலாகாவின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணுனதாயிருப்பதாயும் இந்தியப் பேரரசின் செய்திப் போக்குவரத்து இலாகா துணை அமைச்சர் ராஜ்பகதூர் தெரிவித்திருக்கிறார்.

ஆளும் கட்சிக்கு இறுதி எச்சரிக்கை

இலங்கைத் தமிழர் முடிவு

கொழும்பு, ஜன. 16—

பிப்ரவரி 8-வது வாரத்தில் நடைபெறப்போகும் இலங்கை ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்திர மாநாட்டில் 'சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருக்கவேண்டும்' என்ற பிரரேபனை வரவிருப்பது, தெரிந்த ஒன்றாகும். இதுபற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஆளும் கட்சியிலுள்ள இலங்கை வடபகுதியின் தமிழ் உறுப்பினர்கள் ஒன்று கூடி, மாநாட்டில் வரவிருக்கும் அப்பிரரேபணையைக் கைவிடும்படி பிரதமர் கொத்தலாவலையை வற்புறுத்துவதென முடிவு செய்தனர்.

இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் கட்சியிலிருந்து 'இராஜிநாமா' செய்ய வேண்டுமென்பதே கூட்டத்தின் கருத்து என்று பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

இம்மொழிப் பிரச்சினையில் ஏற்பட்ட 'சிக்கல்' காரணமாக வி. குமாரசாமி, எஸ். நடேசன், [illegible]. எல். திம்மையா ஆகியோர் தங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

புயல்-வெள்ள நிவாரண நிதி

தலைமை நிலையத்துக்குக் கிடைத்துள்ள தொகைகளின் விவரம்:

அடையாறு திருவான்மியூர் அடுத்த திருநீலகண்டபுரம் வாசிகள்	5—2—8
டி. கோவிந்தராசன், விஜயநகரம் ('முரசொலி' அலுவலகம் மூலம்)	7—3—0
கே. நரசிம்மன், வாங்கனூர்	7—8—0
திருப்பத்தூர் (வ. ஆ) சி எம். எஸ் நினைவு மன்றத்தின் சார்பில்	5—0—0
தி. மு. கழகம், குத்தாலம், செயலாளர் என். சண்முகம் அவர்களால்	75-11—0
தி. மு. கழகம், தேவபாண்டலம்	15—0—0
சென்னை சூளை வள்ளுவர் நூலகம்	5—0—0
முக்கூடல் தி. மு. கழகச் செயலாளர் எம். எஸ். முத்துக்குட்டி அவர்கள் மூலம்	251—0—0
புதுச்சேரி வட்ட. தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் மூலம்	101—0—0
கடம்பூர் தி. மு. கழகத் தோழர்கள் மூலம்	75—0—0
சென்னைக்கு அடுத்த திருவான்மியூர் கிராமவாசிகள் 64 பேர்களிடம் திரட்டி தோழர் சி. என். சாரங்கபாணி அவர்கள் அனுப்பியுள்ள தொகை	48—8—6

★

மேலப்பாளையம்

தி. மு. கழகத் தோழர்களால் புயல் நிவாரண நிதிக்காக வசூலிக்கப்பட்ட ரூ. 19-ம், கிளைக் கழக நிதியிலிருந்து ரூ. 5-ம் சேர்த்து, அத்தொகைக்கு 56 படி சோளம் வாங்கி, தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளருக்கு அனுப்பப்பட்டது.

சென்னிமலை

சென்னிமலை மக்கம் தொழிலாளர்கள் மத்தியில், இவ்வூர் தி. மு கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டு கட்சி ஆகிய மூன்று அமைப்புகளும் சேர்ந்து ரூ. 75 வசூல் செய்து சென்னை அரசாங்கப் புயல் நிவாரண நிதி இலாகாவிற்கு அனுப்பிவைத்துள்ளன.

கடம்பூர்

9—1—56 மாலை 5-30 மணிக்கு, கடம்பூர் கிளைக் கழகத் தோழர்கள் மா. கா. துரைராசு, ப. பெரியசாமி, என். கணேசன், போ. பூலி ஆகியோர் மாறு வேடந்தரித்து மேளவாத்தியங்களுடன் தெருத் தெருவாகச் சென்று, ரூ. 81-1-6 வசூல் செய்தனர். இதில் ரூ. 6-1-6 செலவு போக மீதி ரூ. 75-ம் தி. மு கழகத் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

எஸ். ஆர். எம். யூ. திருநெல்வேலி கிளை திறப்பு விழா

11—1—56 மாலை 6 மணிக்கு, நெல்லை சந்திப்பிலுள்ள ரெட்டியார் பில்டிங்கில் தோழர் எம். ஜி. பிரகாசம் தலைமையில் மேற்படி கிளைத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் நடராசன், சங்கக் கொள்கைகள், அதன் வளர்ச்சி, அதில் இரயில்வேதொழிலாளர்கள் சேர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியம் ஆகியவை பற்றி விரிவாகப் பேசினர். பின்னர், தோழர்கள் ஆறுமுகம், ஜெய்னுலாப்தீன், கந்தசாமி ஆகியோரை முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகக்கொண்ட நிர்வாகக் குழுவினரும், செயற் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடலூர் (ஓ. டி.) தி.மா.மு. கழக உறுப்பினர் கூட்டம்

8—1—56-ல் தோழர் இராசகுமார் பீட்டர் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், செயற்குழு உறுப்பினர்கள் ஐந்துபேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், அண்மையில் தி. மா. மு கழகப் பொதுக் குழு தில்லையில் கூடும்போது, கடலூர் கிளைக் கழகப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் இராசகுமார் பீட்டர், பொன்னுரங்கன் ஆகியோரை அனுப்புவதெனவும், 5—2—56-ல் நடைபெற இருக்கும் உறுப்பினர் கூட்டத்தில், 'திராவிட நாடும்-மாணவர்களும்' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், சென்ற டிசம்பர் திங்கள் வரவு-செலவுக் கணக்குகளும் அங்கீகரிக்கப்பட்டன.

சென்னை—புரசை தி. மா. மு. கழக அமைப்பு

9—1—56 மாலை 6 மணியளவில், புரசை, பெருமாள் நாயக்கன் தெரு எண் 18 இல்லத்தில், தோழர் மணி தலைமையிலும், தி. மா. மு. கழக அமைப்பாளர் தோழர் டி கே. பொன்னுவேலு முன்னிலையிலும் மேற்படி கிளைக் கழகம் அமைக்கப்பட்டது. மாணவர்கள் பலர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினர்கள். பின்னர் தோழர் எஸ். கணேசன் அவர்களை செயலாளராகக்கொண்டு செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பம்பாயில் கண்ணதாசன்

தோழர் கண்ணதாசன் அவர்கள் சென்ற 14-ந் தேதியன்று விமானம் மூலம் பம்பாய் வந்து சேர்ந்தார். பம்பாய் சாந்தாகுரூஸ் விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களால் வரவேற்கப்பட்டார். பம்பாய் நிகழ்ச்சிகள் அனைத்தும் முடித்துவிட்டுத் தோழர் கண்ணதாசன் அவர்கள், வருகிற 19-ந் தேதியன்று அகமதாபாத் செல்வார். அங்கு, அகமதாபாத் தி. மு. கழக ஆண்டு விழாக் கூட்டத்தில் கலந்துகொள்வார். முத்தமிழ் நாடக மன்றத்தினரின் நாடகம் ஒன்றிற்கும் தலைமை தாங்குவார்.

கோவை அழகிரி நினைவுப் படிப்பகம்

15—1—56ல், மேற்படி படிப்பகச் சொற்பயிற்சி மன்றச் சார்பில் தோழர் வாசு தலைமையில், 'திருநாள்' என்னும் தலைப்பில் படிப்பகத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

வேலூரில் நூல் நிலையத் திறப்பு

6—1—56 மாலை 4 மணிக்கு சேலம் மாவட்ட ஆணைக்குழுவின் சார்பில், வேலூர் கிளை நூல் நிலையம் வேலூர்—காவேரிப் பாதையில், திரு. ஆர். ரங்கசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. திரு. டி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ. நூல் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசினர். மற்றும் தோழர்கள் மாணிக்கம், கஞ்சப்பன் ஆகியோரும் பேசினர். தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்களும் விழாவில் கலந்துகொண்டார்.

நாகர்கோவில் தி. மா. மு. கழக அமைப்பு

நாகர்கோவில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், வடசேரி தி. மு. கழக அலுவலகத்தில் 11—1—56 மாலை 5 மணிக்கு தோழர் வை. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. ஸ்காட் கிறித்துவக் கல்லூரி, இந்துக் கல்லூரி, எஸ்.எம்.ஆர்.வி. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வருகை தந்திருந்தனர். தோழர் எஸ். சுப்பிரமணியம் அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மத்திய தி மா. மு. கழகப் பிரதிநிதியை அடுத்தக் கூட்டத்தில் தேர்ந்தெடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

திருச்சி தி. மா. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

திருச்சி நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம், 8—1—56 காலை 9 மணிக்கு, 'திராவிடப் பண்ணை' அலுவலகத்தில், தோழர் எம். எஸ். மணி முன்னிலையில் நடைபெற்றது. அதுபோது பிப்ரவரி முதல் வாரத்திற்குள் மாணவர் தி. மு. கழக ஆண்டு விழா நடத்துவதென்றும், மற்றும் இரண்டு அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மைசூர் வள்ளுவர் மன்றம் திறப்பு விழா

8—1—56 அன்று மைசூர், சிவராம்பேட் நகரின் பசார் மாடியில் எண். 9 அறையில் திரு. உ. நமச்சிவாயம் தலைமையில் தோழர் கே. பி. சாமி திறப்புரையுடன் மேற்படி மன்றம் திறந்துவைக்கப்பட்டது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

இந்தப் பயிற்சிக்கு என்ன அவசியமோ?

வாஷிங்டன், ஜன. 11—

எந்த நிமிடத்தில் திடீர்த் தாக்குதல் ஏற்பட்டாலும் அதனைச் சமாளிப்பதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறதாம்.

இரவு, பகல் என்ற வித்தியாசமின்றி நூற்றுக்கணக்கான ஜெட் விமானங்கள் அமெரிக்கா மீது வட்டமிட்டுக் காவல் புரிந்து வருகின்றனவாம்.

மேற்கூறிய இவ்விமானங்கள், அமெரிக்காமீதும், மற்றும் அலாஸ்காவில் உள்ள விமான தளங்களுக்கும் பறந்து கொண்டிருக்கின்றன.

இப்பொழுது நடைபெறுவது பயிற்சியேயாகும். இந்த விமானங்களில் அணுகுண்டுகள் மாத்திரமே இல்லை; அணுகுண்டுகளின் எடைக்குச் சமமான ஆயுதங்களும் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

அணுகுண்டுக் கிடங்கிலிருந்து ஒரு மணி நேரப் பிரயாணத்தில் தான் எப்பொழுதும் விமானங்கள் உள்ளனவாம். எனவே ஒரு மணி நேரத்திற்குள் அணுகுண்டுகளால் 'பதில் அடி' கொடுக்க அமெரிக்காவால் முடியுமாம். ஆனாலும், சட்டப்படி அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அனுமதித்தாலன்றி அணுகுண்டுகளை இராணுவம் உபயோகிக்க முடியாது. எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருப்பதுதான் இந்தப் பயிற்சியின் நோக்கமாம். நூற்றுக்கணக்கான விமானங்கள் எப்பொழுதும் வானத்திலேயே இருக்கக்கூடியவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தளங்கள் அழிக்கப்பட்டாலும் இந்த விமானங்கள் பதில் 'அடி' கொடுக்க முடியுமாம்.

எம். ஆர். ஜெயகர் பரணி

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"பண்டித நேரு மீது எனக்கு அளவுகடந்த பிரியம் உண்டு; நான் கட்சிப் பற்றற்றவன் என்ருலும் அவரிடம் எனக்கு எல்லையற்ற மரியாதையும் உண்டு; அவர் மராட்டியர்தம் எண்ணங்களை—உணர்வுகளைத் தெரிந்திருப்பார் என்றே நம்புகிறேன்; ஆனல், மராட்டியருக்கு டெல்லி பீடத்தில் செல்வாக்கு இல்லாமையினுல், அவரை, இதரர்கள் வசப்படுத்திவிட்டார்கள்போலும்! காங்கிரஸ் தலைவர் தேபர் முன்பு தந்த உறுதிமொழிகள் எல்லாம் என்ன ஆயின? அவை பண்டித நேருவின் 'உரை'யில் இடம் பெறக்காணேம்! எனவே, மராட்டியர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் தோல்வியை எதிர்த்துப் போரிட்டாக வேண்டும்.

"சங்கர்ராவ் தேவ் மேலிடத்தாருடன் பலமுறை பேசினர்—பலன் காணேம்; அதிகமாக அவர்தான் வருந்துவார் என்றெண்ணுகிறேன். மராட்டியரே, இலட்சியத்தை ஈடேற்றிக் கொள்ளப் போராடப் புறப்படுவீர்,"

—என்று, பூனு பல்கலைக் கழகத் துணைவேந்தரான டாக்டர் எம். ஆர். ஜெயகர், நேற்று திருவல்லிக்கேணி 'மராட்டிய சமாஜ்' ஆதரவில் நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

* * *

"பம்பாய் நகரை மராட்டியத்திலிருந்து பிரித்த பண்டித நேருவின் செயல், மராட்டியத்தின் தலையை வெட்டி வீழ்த்துவதாகும்; பம்பாய் நகரம்தான் மராட்டியத்தின் தலையாகும்.

"மராட்டியர், தங்கள் தலையை—பம்பாயை, வியர்வை சிந்தி, கண்ணீரைக் காணிக்கையாக்கி—ஏன்—தேவையானல் இரத்தமும் சிந்தியேனும் மராட்டியத்துடன் இணைத்தே தீருவர்,"

—என்று, இந்து மகா சபைத் தலைவரும், மக்கள் சபை உறுப்பினருமான என். பி. கரே, பம்பாயில் தெரிவித்திருக்கிருர்.

★

நான்கு சட்டசபை... உறுப்பினர்கள் இராஜினுமா!

பம்பாய், ஜன. 18—

பம்பாய் சட்டசபையில் உள்ள ம. சோ. கட்சி உறுப்பினர்களான நால்வர், பம்பாய் நகரம், பெல்காம், கார்வார் ஆகிய பகுதிகள் மராட்டியத்துடன் இணைக்கப்படாததை எதிர்த்து தங்கள் சட்டசபை உறுப்பினர் பதவிகளை இராஜினுமாச் செய்துள்ளார்கள் என்று தெரிய வருகிறது. இன்னும் நான்கு பேர்களும் விலகுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★

ஷோலாப்பூரில் கடை அடைப்பு

ஷோலாப்பூர் நெசவாலைகளைச் சேர்ந்த 25 000 தொழிலாளர்கள், பம்பாயை மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் கொண்டுவருவதையும், பம்பாயில் பலரைக் கைது செய்ததையும் எதிர்த்து, வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்டம் செய்தனர் நகரில் உள்ள பள்ளிகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டன.

★

சோஷலிஸ்டுகள் ஆர்ப்பாட்டம்—மறியல்

பூனு, ஜன. 17—

பம்பாய் குறித்த மத்திய சர்க்காரின் முடிவை எதிர்த்து, மத்திய சர்க்கார் அலுவலகங்களின் முன்பெல்லாம் பெரும் ஆர்ப்பாட்டம், இடைவிடாத மறியல் முதலியன நடத்தப்போவதாகப் பூனு நகர சோஷலிஸ்டுகள் தெரிவித்திருக்கின்றனர்.

மராட்டிய சோஷலிஸ்டுக் கட்சிச் செயலாளரான எஸ். கே கேல்கர் கூறியதாவது:—

"புதுடில்லி தந்துள்ள அறை கூவலை மராட்டியர் ஏற்றுக் கொண்டாக வேண்டும்; மராட்டியர், காலந்தாழ்த்தாது பெரும் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துவிட்டனர்; ஆனல், பலாத்காரமான நடவடிக்கைகளில் மராட்டியர் ஈடுபடக் கூடாது; ஏனெனில், அவை, மக்களது போராட்டத்தை ஒடுக்குவதற்கு சர்க்கார் ஏஜெண்டுகளுக்குத்தான் பயன்படும்.

"முதலில், சர்க்கார் வழங்கியுள்ள பட்டங்கள், கௌரவப் பதவிகள் இவற்றையெல்லாம் மராட்டியர் உதறியெறிய வேண்டும் சர்க்கார் நடத்தும் குடியரசு தினம் போன்ற விழாக்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

"தபால்-தந்தி அலுவலகங்கள், இரயில்வே, வருமான வரி இலாகா அலுவலகங்கள் இங்கெல்லாம், மராட்டியர் பெரும் அளவில் கூடி நின்று மறியல் செய்ய வேண்டும்.; மாணவர்கள் தங்கள் பங்கினைச் செலுத்த வேண்டும்; விவசாயப் பெருமக்கள் சர்க்காருக்கு எந்தவித வரியும் தராது இயக்கம் நடத்த வேண்டும்."

★

மராட்டியர் தினம்

மராட்டியக் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மாநாடு ஒன்றில், "வரும் ஜன. 26-ந் தேதியை 'மராட்டியர் தின'மாகக் கொண்டாட வேண்டும்; அன்று எல்லா இடங்களிலும் கொடி ஏற்றிவைத்து, வணக்கம் செலுத்தி, 'சம்யுக்த மராட்டியம் அமைப்பதற்காக உயிரையும் தருவோம்' என்ற உறுதிமொழியை மராட்டிய இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும்" என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

மராட்டியம் பாடும் போர்ப் பரணி!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பெல்காம், கொதிப்பேறிய கண்ணுடியாகவிருக்கிறது.

பம்பாய் நகரமெங்கும் மராட்டியர், ஆர்வம் கொளுத்திய உணர்ச்சித் தீப்பிழம்புகளாக விதிகளில் வலம் வந்தனர். அவர்களது கண்கள் இரத்தச் சிவப்பேறி இருந்தன கோபத்தால்!

மாணவர்கள் பலர், பண்டிதரின் நியாயவிரோதப்போக்கை எதிர்த்து ஆத்திரம் கொண்ட நிலையில் வீதிகளைச் சுற்றிவந்தனர், விண்ணதிர முழக்கமிட்டவண்ணம்! போலீசாரோ, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்; தடிகொண்டு தாக்கினர், மாணவத் தோழர்களை!

பம்பாயில் மற்றுமோர் பகுதியில் தொழிலாளர்கள்மீது போலீசார் 14-ரவுண்டுகள் சுட்டனர், அவர்களது ஊர்வலத்தைக் கலைக்க!

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர்.

நகரில் பஸ், டிராம் வண்டிகள் வழக்கம்போல அமைதியாகச் செல்ல முடியவில்லை.

மராட்டியரில் தீவிரவாதிகளாயிருப்போர், உணர்ச்சிவயப்பட்ட நிலையில், சிலபல தகாத வேலையில் ஈடுபட்டதாகவும் போலீசார் கூறுகின்றனர்.

அத்தகையோர் கற்களால் தாக்குதல் நடத்தியதாகவும்; அதனல் சிலருக்குக்காயம்பட்டதாகவும் போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

எத்தனையோ சம்பவங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள், பம்பாய் நகரை இயக்கிவருகின்றன.

மராட்டியம் கொந்தளிக்கிறது—குமுறுகிறது. விளைவு?

ஒட்டாவா, ஜன. 17—

கம்யூனிஸ்டு சீன சர்க்காரை அங்கீகரிப்பது பற்றி கனடா சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறதாம்.

சர்க்கார் துறையில் சிக்கனம் ஏற்படும்?

ஆலோசனைகள் கூறுவதற்கு குழு ஒன்று நியமனமாம்!

தொழில்கள்மீதுகட்டுப்பாடுவரும்?

நாட்டில் சுற்றுப்பயணம் செய்து சர்க்கார் துறையில் சிக்கனம் ஏற்படுத்துவது பற்றி ஆலோசனைகள் கூறுவதற்கு, உயர்தரக் குழு ஒன்றை உருவாக்குவதற்குச் சர்க்கார் யோசனை செய்துகொண்டிருக்கிறதாம்

'வீண் செலவுகளைத் தவிர்ப்பதற்கு இது உதவி செய்யும்' என்று, 'பார்லிமெண்டரி உப-கமிட்டி'யில் இது பற்றிக் குறிப்பிட்ட மத்திய அமைச்சர், இரண்டாவது திட்ட அமுலுக்குத்தேவையான பணத்தில், ரூ. 1,200 கோடிக்கு மேல் துண்டு விழாது என்றும், இத்துண்டுத் தொகையை ஈடு செய்வதற்கான வழிமுறைகளை அக்குழு கூறுமென்றும் தெரிவித்தார்.

தொழில்கள்மீது கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டால் அதற்காக முணுமுணுக்கக் கூடாதென்று அவர் கூறியதாகத் தெரிகிறதாம்.

மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'திரு—தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள், சட்டசபை உறுப்பினர்—மக்கள்சபை உறுப்பினர் பதவிகளைவிட்டு விலக வேண்டும்' என்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

மதுரையிலும், கோவையிலும் ஆயிரக்கணக்கான மாணவமணிகள் திரண்டெழுந்து எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்கின்றனர்.

★

மதுரையில்...

17—1—56ல், நேருவின் தீர்ப்பை எதிர்த்து மதுரையில் உள்ள உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் 5,000 பேர்களுக்கு மேல் ஊர்வலமாக வந்து, எல்லாப் பள்ளிகளையும் மூடச் சொல்லி, நகரில் பல வீதிகளில் உள்ள கடைகளையும் அடைக்கச் சொன்னர்கள்.

ஊர்வலமும், கடையடைப்பும் அமைதியாக நடைபெற்றது.

வீதிகளிலும், மூடப்பட்ட கடைகளிலும், நகர பஸ், மற்ற பஸ்களிலும், போலீஸ் லாரிகளிலும்—'நேரு சர்க்கார் ஒழிக,' 'காமராஜரே, இராஜினமாச் செய்,' 'நேருவின் தீர்ப்பு அநீதி' 'பீர்மேடு—தேவிகுளம் தமிழர்களுக்கே,' 'தமிழர்களே ஒன்று சேருங்கள்,' 'பீர்மேடு, தேவிகுளம் பகுதிகளை இரத்தம் சிந்தியாவது பெறுவோம்,' என்ற வாக்கியங்களை இடைவிடாது எழுதி இருந்தார்கள்.

ஊர்வலத்தில் மேற்படி ஒலிகளை எழுப்பிக் கொண்டே போய் திலகர் சதுக்கத்தில், கடுமையானவெய்யிலில், மாணவர்களும் பொதுமக்களுமாகக் கூடி இருந்தார்கள். பல பள்ளி மாணவர்களும் பேசிய பின், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★

கோவையில்...

சுமார் இரண்டாயிரம் மாணவர்கள், காங்கிரஸ் மேலிட முடிவைக் கேட்டுத் திடுக்கிட்டவர்களாகக் கல்லூரிகள், பள்ளிகளைவிட்டு வெளியேறி, வீதிகளில் வலம் வந்து, 'தேவிகுளம்-பீர்மேடு தமிழர்களுக்கே', 'இந்திய சர்க்காரின் அநீதி ஒழிக', என்று குரல் எழுப்பிக்கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்; கண்டன முழக்கம் செய்தனர்.

எண்ணற்ற மாணவர்கள் கையொப்பமிட்டு 'தேவிகுளம் பீர்மேடு தமிழகத்தின் உயிரான பகுதிகளாகும்; அவற்றைத் தமிழகத்திலிருந்து பிரிப்பது, உடலிலிருந்து ஒருகாலைவெட்டி விடுவது போலாகும்; எனவே, அவை தமிழகத்துடன் இணைய வழி செய்க', என்று கோரி முதன் மந்திரி காமராசருக்கு மனு ஒன்று அனுப்பிவைத்தனர்.

சுரங்க நிர்வாகிகள்மீது நடவடிக்கை

புதுடில்லி, ஜன 17—

மத்தியப் பிரதேசத்திலுள்ள நியூட்டன் சிக்லி சுரங்க நிர்வாகத்தினருக்கு எதிராகவும், பீகாரில் உள்ள அம்லாபாத் சுரங்க நிர்வாகத்திற்கு எதிராகவும், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

இந்த இரு சுரங்க விபத்துக்களிலும் 114 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிறுவனங்களின் மேற்பார்வை சிப்பந்திகளின்மீதும் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு செய்துள்ளதாக சர்க்கார் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

முல்லைவாடியில் முதல் அமைச்சர்

கழகக் கொடியை தடுக்க முயற்சி

முல்லைவாடி, ஜன. 17—

சென்ற 14-ந் தேதியன்று ஆத்தூர் வட்டத்தைச் சேர்ந்த முல்லைவாடிக்கு சென்னை முதலமைச்சர் காமராசர், அங்குள்ள ஒருபள்ளிக்கூட திறப்பு விழாவிற்காக வந்திருந்தார். அன்று காலை 10 மணியளவில் முல்லைவாடி தி.மு. கழகச் செயலாளர் தோழர் இல. வெங்கட்டராமன், துணைச்செயலாளர் தோழர் மா. மணி, மற்றும் சில கழகத் தோழர்களும், பொங்கல் விழாவை முன்னிட்டுக் கழகத்தின் கொடிமரத்தில் புதியகொடியை ஏற்றுவித்து, ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத் தாளையும், தீண்டாமைச் சுவரொட்டிகளையும் ஒட்டிக்கொண்டு இருந்தனர். அப்பொழுது சில காங்கிரஸ் பிரமுகர்கள் அவர்களிடம் சென்று, அச்சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது என்றும், கழகக் கொடியை அவிழ்த்துவிட வேண்டும் என்றும் சொன்னர்கள். அதற்குச் செயலாளர், தங்கள் சொந்த இடத்திலேயே தங்கள் சொந்தக் கம்பத்திலே—தான் கொடியை கட்டியிருப்பதாகவும், ஆகையால் அதை அவிழ்க்க முடியாது என்றும் கண்டிப்பாகக் கூறினர்கள். அன்று கிளைக்கழக இல்லத்தின் முன்பாகவே ஒரு தண்ணீர் தொட்டி திறப்பு விழாவேறு திரு. காமராசர் அவர்களால் நடைபெற இருந்தது. அதனல் ஆத்திரம் அடைந்த காங்கிரஸ்காரர்கள் பலாத்காரமான முறையில் கழகத் தோழர்களை சண்டைக்கிழுத்திருக்கின்றனர் எனினும், கழகத் தோழர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற குறிக்கோளை மறவாமல் பணியாற்றினர். தேசியத்தாரது மிரட்டலும், பயமுறுத்தலும் ஒன்றும் செய்ய முடியாமற்போகவே பிறகு மௌனமாகத் திரும்பிவிட்டனர்.

அன்று பிற்பகல் 1 மணிக்கு திரு. காமராசர் வரும்பொழுது வீதிகள் எங்கும் தி. மு. கழகக் கொடிகளையும், ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத் தாள்களையும், தீண்டாமைச் சுவரொட்டிகளையும் கண்டு சென்ருர்!

(ந. நி.)

உழைத்துவிட்டு இல்லம் திரும்பிய பெண்களுக்கு நேரிட்ட கதி!

கோதாவரி நதியில் மூழ்கி மாண்டனராம்!

ஐதராபாத், ஜன. 16—

53 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு கோதாவரி நதியில் சென்றுகொண்டிருந்த ஒரு படகு திடீரென நதியில் கவிழ்ந்ததால், 46 பெண்கள் மூழ்கி இறந்தனர் என்று தெரிய வருகிறது.

இந்த விபத்து அடிலாபாத் மாவட்டத்தில் உள்ள மஜ்ஜி கிராமம் அருகே கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

இதுவரை 44 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன; இன்னும் இரு பிணங்கள் தேடப்பட்டு வருகின்றன என்றும் இரு படகோட்டிகளும், 5 பெண்களும் நீந்திக் கரை ஏறினர் என்றும் கூறப்படுகிறது

படகில் பிரயாணம் செய்த அந்தப் பெண்கள், தினவேலை செய்து வந்தவர்கள் என்றும், நதியின் எதிர்க்கரையில் வேலை செய்துவிட்டு படகில் ஊர் திரும்புகையிலேயே இந்த விபத்து நேர்ந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

படகின் சொந்தக்காரர் கைதாகியுள்ளார்; பாரம் அதிகமாக இருந்ததினலேயே படகு கவிழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

கல்லூரி மாணவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூ 9,657 வரை வசூலாகியிருக்கிறதாம்

பிரிஜேந்தா பாண்டே என்ற மாணவர், புத்தகாலயத்திற்கான கட்டிட வேலை துவங்கும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்று கூறியிருக்கிருராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ